**செ.வெ.எண்.182/2018** **நாள்: 04.05.2018**

**காஞ்சிபுரம் மாவட்டம், இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் நிறுவனத்தின் நிதியுதவியில் 186 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.19.56 லட்சம் மதிப்பிலான உபகரணங்களை மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.நூர் முகம்மது அவர்கள் வழங்கினார்.**

மத்திய அரசின் அலிம்கோ நிறுவனம், பெங்களூரு அவர்களால் மாற்றுத்திறனாளிகளுக்கு இந்தியன் ஆயில் கார்ப்பரேசனின் சமூகப்பணிக்கான நிதியுதவியுடன் காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணங்கள் வழங்க சிறப்பு பரிசோதனை முகாம் 28-07-2018 மற்றும் 6,7,8 மார்ச் 2018 ஆகிய நாட்களில் மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் மூலம் நடத்தப்பட்டது. இம்முகாமில் 186 பயனாளிகள் கண்டறியப்பட்டு, அவர்களுக்கு தேவையான ரூ.19.56 லட்சம் மதிப்பிலான 892 உபகரணங்கள் இந்தியன் ஆயில் கார்ப்பரேசனின் சமூகப்பணிக்கான நிதியுதவியின் மூலம் பெறப்பட்டது.

மேற்படி முகாமில் கலந்து கொண்ட மாற்றுத் திறனாளிகளுக்கு விலையில்லா உபகரணங்களான சக்கர நாற்காலி, ஊன்றுகோல், காதொலி கருவி, மூன்று சக்கர வண்டி, சிபி சேர், நடைபயிற்சி உபகரணம் (Rollators), மன வளர்ச்சி குன்றியவர்களுக்கான உபகரணம் (MSIED Kits), தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உபகரணம் (ADL Kit), பார்வையற்றோர்களுக்கான ஊன்றுகோல் (Smart Cane), பேட்டரியால் இயங்கும் மூன்று சக்கர வண்டி, காலிபர் மற்றும் செயற்கை கால் போன்ற உபகரணங்களை காஞ்சிபுரம் ஆற்காடு நாராயணசாமி முதலியார் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.நூர்முகம்மது அவர்கள் பங்கேற்று மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கினார்.

இவ்விழாவில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அலுவலர் திரு.ய.தே.ஸ்ரீநாத், மாவட்ட கல்வி அலுவலர் திருமதி.பி.மகேஸ்வரி, சென்னை இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் நிறுவன முதன்மை பொதுமேலாளர் (செயல்பாடு) திரு.எஸ்.சுந்தர், முதன்மை பொதுமேலாளர் (கட்டுமானம்) திரு.தங்கராஜ், சி.எஸ்.ஆர். இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் துணை மேலாளர் திரு.ராமகிஷோர், அலிம்கோ நிறுவன மேலாளர் திரு.அனுப்பம் பிரகாஷ் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**காஞ்சிபுரம்.**